பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

சுடர் 5 பிரமோதூத ஹூ புரட்டாதி மீ 08 உ திங்கட்கிழமை (24 09-1990) ஹிஜ்ரி 1410 ற. அவ்வல் 04 கதிர்: 204

# விடுதலை புலிகளை இந்தியா உடன் அங்கீகரிக்கவேண்டும்

## கிட்டு விடுத்துள்ள கோரிக்கை

சென்னை, செப். 24

பாலஸ்தீன விடுதலை இயக்கம், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆகியவற்றை அங்கீகரித்தது போன்று விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் இந்தியா உடனடியாக அங்கீகரிக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

சென்னையிலிருந்து வெளியாகும் பிரபல பத்திரிகை ஒன்றுக்கு லண்டனிலிருந்து தொலைபேசி மூலம் அவர் பேட்டியளித்தார்.

தமிழீழத்திற்கு மாற்றாக எதுவும் இருக்க முடியாது: அதற்கீடான மாற்று பற்றி யோசனை செய்யும்படி கூறுவது தவறானது என்றார் கிட்டு

''சிங்களவர்களுக்கு இருப்பதுபோல முழு உரிமையும் வேண்டும் என்று ஈழத்தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். பலகாலமாக தமிழர்கள் பாரபட்சமாக நடத்தப்பட்டதன் பிறகுதான் தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைத்தனர். இதற்கு மாற்றாக வேறு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நல்லூர் தேர் முட்டிக்கு அருகே விழுந்த ஷெல்!

யாழ்ப்பாணம், செப். 24

நேற்று மாலை சுமார் 4 மணியளவில் திடீரென நகரை நோக்கி அடுத்தடுத்து ஷெல்கள் ஏவப்பட்டன. சுமார் 4 30 மணியளவில் சில ஷெல்கள் நல்லூர்ப் பகுதியிலும் வந்து விழுந்தன.

ஒரு ஷெல் நல்லூர் கோயில் வளவுக்குள் - கிழக்குப்பக்கமாக - தேர் முட்டிக்கு சில யார் தூரத்தில் வந்து விழுந்தது. அதிர்ஷ்டவசமாக அது வெடிக்கவில்லை

மற்றொரு ஷெல் நல்லூர் கோயிலுக்குச் சமீபமாக - கோவில் வீதியில் - தெரு ஓரமாக மதிலை துளைத்துச் சென்று விழுந்தது. எனினும் அந்த ஷெல்லும் வெடிக்கவில்லை.

இந்த இரு ஷெல்களும் வெடித்திருந்தால் பெரும் உயிர்ச் சேதங்கள் ஏற்படக் கூடிய சாத்தியம் இருந்தது. (ஒ-5)

## யாழ். நகரில் பல பகுதிகளிலும் நேற்று மாலை வான் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப், 24

யாழ். நகரின் பல பகுதிகளிலும் நேற்றுமாலை விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன இதனால் கடைகள், வீடுகள் பல சேதமுற்றன.

நேற்றுமாலை 4-30 மணியளவில் வந்த இரு பொம்மர்கள் குண்டுத் தாக்குதல்களில் இறங்கின. அடுத்து வந்த அவ்ரோவும் தாக்குதலை நடத்தியது.

யாழ். இந்துக்கல்லூரி வீதியில் - நீராவியடிக் கேணிக்கு அருகேயுள்ள 'சராஜ்' ஒன்றின்மீது குண்டுவீசப்பட்டது. அப்போது அப்பகுதியைச் சேர்ந்த இராசன் என்ற இளைஞன் காயமடைந்தார்

கேணிக்குஅருகே மற்றொரு குண்டு வீசப்பட்டது. இதனால்வீடு ஒன்று சேதமடைந்தது. வீட்டில் எவரும் இல்லாததால் உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை.

கஸ்தூரியார் வீதியில் கன்னாதிட்டிக்கும் நாவலர் வீதிக்கும் இடையில் அவ்ரோ

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சிங்கபுரவில் புலிகள் தாக்கு; 10 சிப்பாய்கள் உயிரிழப்பு

யாழ்ப்பணம், செப் 24

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை சிங்கபுர இராணுவ முகாமில் இருந்து காண்டார்காட்டு இராணுவ முகாமுக்கு டிரக் ஒன்றில் சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் டிரக்கில் வந்த பத்து இராணுவத்தினர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

—விடுதலைப் புலிகள் வட்

[4 ஆம் பக்சம் பார்க்க]

## மண்கும்பான் வரை சென்று திரும்பிய இராணுவத்தினர்

வேலணை, செப். 24

மண்டைதீவு முகாமில் இருந்து கவச வாகனங்களுடன் புறப்பட்ட படையினர் மண்கும்பான் பள்ளி வாசல்வரை வந்து திரும்பிச் சென்றனர்,

நேற்றுக் காலை 8.30 மணியளவில் மண்டைதீவு முகாமில் இருந்து கவச வாகனங்களில் (செயின் புளக்) புறப்பட்ட 50க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மீண்டும் மண்டைதீவு முகாமுக்கு திரும்பினார்கள்.

இதேவேளை —

வேலணை, மண்கும்பான், அராலித்துறைப் பகுதிகளில் காலை ஆறுமணியில் இருந்து நண்பகல் ஒரு மணிவரை

[4 ஆம் பக்கம் பார்க்க]

### வீரமரணம்

மண்டைதீவில் இருந்து நேற்று முன் தினம் [சனி] மாலை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலின் போது கோட்டைப் பகுதி காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இரு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

லெப்டினன்ட் சுமன் [ஆனந்], சுதர்சன் [ஆறுமுகம் ஆனந்தராஜா - இளவாலை] ஆகியோரே அந்த இரு போராளிகளும் ஆவர். [ஒ]

## தமிழர் பிரச்சினையைத் தீர்க்குமாறு ஐ. நா. சபையிடம் வேண்டுகோள்

### திருச்சபை அனுப்பியது

யாழ்ப்பாணம், செப். 24

இன்னல்களுக்குள்ளாகியுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு பரிகாரம் காண ஸ்ரீலங்கா அரசுக்கு உந்துதல் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு உலகத்திருச்சபை மன்றம் ஐ. நா. சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஜெனிவாவில் இயங்கும் உலகத் திருச்சபை மன்றத்துக்கு தென்-இந்திய திருச்சபை விடுத்த கோரிக்கையை அடுத்தே ஐ. நா. சபையின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டுவரப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் அநியாயமாகக் கொல்லப்படுவதை தடுத்து நிறுத்தி, பிரச்சினையைமுடிவுக்குக்கொண்டுவர மாநில சுயாட்சி போன்ற ஓர் தீர்வை உருவாக்குவதற்கு இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும் என்று உலகத் திருச்சபை மன்றத்துக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இவ் விடயம் ஐ நா. சபையின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக உலகத் திருச்சபை தென்இந்திய திருச்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அத்தியடியில் விழுந்த ஷெல்கள்!

யாழ்ப்ப ணம், செப்; 24

நேற்றுக் காலை 11 மணியளவில் அத்தியடிப்பகுதியில் மூன்று ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. அதனால் சில வீடுகள் சேதமடைந்தன. [ஒ-3]

## செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு நிலையைப் பகிரங்கப்படுத்த வேண்டும்

### புலிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 24

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு உரிய முறையில் செயற்பட முடியாமல் ஸ்ரீலங்கா தடைசெய்து வருவதையும் தனது பொய்பிரசாரத்துக்கு இந்த அமைப்பைப் பயன்படுத்துவதையும் பிரஸ்தாப அமைப்பு பகிரங்கப்படுத்தவேண்டும் என நாம் விரும்புகிறோம்.

— இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் [illegible] அறிக்கை ஒன்றின் [illegible] கோரியிருக்கிறது. அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

தமிழீழ-சிறீலங்காப் போர் ஆரம்பித்து 3 மாதங்களாகிவிட்டன. இந்த 3 மாதங்களிலும் தமிழீழப் பகுதியில் செயலாற்றிய செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழுவின் செயற்பாடுகள் தமிழீழ [illegible] உள்ள [illegible] அபிப்பிராயங்களைத் தாம் தெரிவிப்பதில்லை என செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழு கூறிவருகின்றது.

இதை சிறீலங்கா பயன்படுத்திக்கொண்டு செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழுவைத் தனது பொய்ப் பிரசாரத்திற்குக் கேடயமாகப் பயன்படுத்துகின்றது இதுதான் எமது மக்களுக்கு வேதனையைத் தருகின்றது.

சிறீலங்கா கடந்த காலங்களில் தமிழ் மக்களை ஏமாற்றியது போல் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவையும் உலகையும் ஏமாற்றி வருகின்றது.

மனிதாபிமான அடிப்படையில் தாம் நடப்பதாகவும் அதை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஊடாகச் செய்வதாகவும் அது உலகை ஏமாற்றும் விதத்தில் கூறுகின்றது.

மறு புறத்தில் — மறைமுகமாக — தான் பகிரங்கமாகச் சொன்னவற்றை செய்யாமல் விடுகின்றது;

[4 ஆம் பக்சம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### இடமாற்றம்

அரச ஜவுளியகம் இல: 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் மண்டேலா ரேடர் (புத்தக சாலை) இல. 2, பஸ்நிலையம் ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம் ஆகியன தற்போது இல. 256, பருத்தித்துறை வீதி, (நல்லூர் தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். [13938]

### கோழித்தீன்

கோழித்தீன் வகைகள் கலந்து கொடுக்கப்படும். மூலதார பொருட்கள் அரைத்து கொடுக்கப்படும். எம்மிடம் கண்டல் பட்டை சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம் சிவா மில்ஸ் அன் இண்டஸ்றீஸ், 46/1, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம். [14247]

### மீரா வெளியீடுகள்

சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும், 1989ல், 1990ல், வெளிவந்த உயிரோட்டமான நாவல்கள் 100/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/-ரூபா வுக்குப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம் ஸ்ரீராம் புத்தகசாலை, நல்லூர். [14236]

### காணவில்லை

சண்முகம் சிறிஸ்கந்தராஜா என்பவரின் அடையாள அட்டை தவறிவிட்டது எடுத்தவர்கள் உரிய விலாசத்திலோ அல்லது கீழ்கண்ட விலாசத்திலோ ஒப்படைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். ரஞ்சினி ரயர் வேக்ஸ், கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். (14310)

### சத்தியன் வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 24 சனிக்கிழமை மண்டைதீவு இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலின் தொலைத்தொடர்பு நிலையத்தில் காவலில் ஈடுபட்டிருந்த சத்தியன் (பெரியண்ணன் ஜெயராஜா - அம்பன் குடத்தனை) என்ற போராளி வீரமரணம் அடைந்தார். (இ-6)

# தீவுப்பகுதியிலுள்ள 7 முகாம்களில் 1,744 அகதிக் குடும்பங்கள் தஞ்சம்

## உணவு - உடை - மருத்துவ வசதிகள் இன்றித் தவிப்பு

அனலைதீவு, செப் 24 தீவுப் பகுதியில் தற்போது இயங்கி வரும் ஏழு அகதி முகாம்களில் 1,744 குடும்பங்களைச் சேர்ந்த 8, 754 பேர் தங்கி உள்ளனர்.

இந்த முகாம்களுக்கு போதிய உணவு, உடை மருத்துவ வசதிகளை அளிக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அகதிமுகாம்களும் அவற்றில் தங்கி உள்ளோர் விபரமும் வருமாறு:

சாட்டி தேவாலயம் - 45 குடும்பங்கள்

மண்கும்பான் பெரிய பள்ளிவாசல் - 707 குடும்பங்கள்.

பாபா பள்ளிவாசல் - 208 குடும்பங்கள்.

மண்கும்பான் பாடசாலை- 396 குடும்பங்கள்.

சிவகாமி அம்மன் கோவில் 65 குடும்பங்கள்

அன்னைமேரி தேவாலயம் சுருவில்- 65 குடும்பங்கள்.

சின்னமடு தேவாலயம்-245 குடும்பங்கள்.

மண்டைதீவு அல்லைப்பிட்டியிலிருந்து வந்த அகதிகள் உடுத்த உடையுடன் தத்தமது வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் சகல உடைமைகளையும் இழந்து அகதிகளாகி உள்ளனர்.

இவர்கள் குடி தண்ணீர், சுகாதாரம், வைத்தியம், உணவு உடைவசதிகள் இல்லாது அல்லல்படுகிறார்கள்.

மண்கும்பான் பாடசாலையில் 4 பேர் வயிற்றோட்ட நோயால் மரணமடைந்துள்ளனர். அசுத்தமான நீர்பருகுவதாலும், இலையான் அதிகமானதாலும் போஷாக்குள்ள உணவு இல்லாததாலும் சுகாதார வசதிகள் இன்மையாலும் வயிற்றோட்டம் உண்டானது.

குடிக்கும் நீரை சுடவைத்து ஆறவைத்துக் குடித்தல், முகாம் சுற்றாடலை துப்புரவாக வைத்திருத்தல், கழிவுப் பொருள்களை நிலத்தில் புதைத்தல் சமைத்த உணவை இலையான் மொய்க்காதுமூடி வைத்தல், சமைத்தவுடன் உணவருந்தல், குப்பை கூளங்களைப் பெட்டியில் போட்டு மூடுதல் அல்லது எரித்தல் ஆகியன மூலமே வயிற்றோட்ட நோயைக் கட்டுப்படுத்த முடியும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வேலணை வைத்திய அதிகாரியும் சுகாதாரப்பகுதியினரும் அண்மையில் எடுத்த நடவடிக்கை காரணமாக வயிற்றோட்டம் குறைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. (இ -18)

# தமிழகம் தனிநாடாக இருந்தால் நடப்பது வேறு!

## அகதிகள் மத்தியில் அமைச்சர்

காஞ்சிபுரம், செப். 24 தமிழகம் இன்று தனிநாடாக இருந்திருந்தால் தமிழருக்கு அநீதி விளைவிக்கும் இலங்கை ஜனாதிபதியை இந்நேரம் வேலூர் சிறையில் அடைத்திருப்போம்.

செங்கை மாவட்டம் புலால் அகதிகள் முகாமில் அகதிகளுக்கு டெலிவிஷன் வழங்கும்வைபவத்தில் கலந்து கொண்டு பேசுகையில் தமிழக அமைச்சர் நாஞ்சில் மனோகரன் மேற்கண்டவாறு கூறினார்.

நாஞ்சில் மனோகரன் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் அடிபட்டு, உதைபட்டு, மனைவி மக்களை இழந்து, கை, கால் வெட்டப்பட்டு தமிழகம் தப்பி வந்திருக்கிறீர்கள் உங்களுக்கு உதவத் தயாராக உள்ளோம். இலங்கை முன்பு ஒரு காலத்தில் பாலைவனமாக இருந்தது அதனைச் சோலைவனமாக மாற்றியது தமிழ் மக்களே ஆகவே ஈழம் தமிழர்களுக்குத்தான் சொந்தம். அதனை எண்ணி நீங்கள் செயற்பட வேண்டும்.

உங்களுக்கு நாங்கள் செய்யும் உதவி போதுமானது என்று நான் கூறவில்லை. உங்களுக்கு எந்த அளவுக்கு அதிகம் உதவமுடியுமோ அந்த அளவுக்கு உதவுகிறோம். இந்தப் பணியில் தேசிய முன்னணி அரசு தமிழக அரசோடு கைகோர்த்து உங்களுக்கு உதவுகிறது.

இலங்கை ஜனாதிபதி மனிதாபிமான அடிப்படையில் தமிழர் பிரச்சினையை அணுக வேண்டும்.

உங்களுக்குள் இடையில் ஒற்றுமை வேண்டும். நீங்கள் கோஷ்டி சேர்த்துக் கொண்டு சண்டை பிடிக்கக் கூடாது. இவ்வாறு சண்டை போடுவதால் அங்கு தமிழனை சிங்களவன் அடிக்கிறான். இங்கு தமிழனே தமிழனை அடிக்கிறான் என்று நாங்கள் வருந்த வேண்டிவரும். ஆகவே ஒற்றுமையாக செயற்படுங்கள்.

இப்படி அவர் கூறினார். [இ]

# ராஜீவ் - ஜே. ஆர். உடன்பாட்டின் அடிப்படையில் பிரச்சினைக்கு தீர்வு

## சென்னையில் குஜ்ரால் கருத்து

சென்னை, செப். 24 ஒன்றுபட்ட இலங்கையில் ராஜீவ் காந்தி - ஜெயவர்த்தனா உடன்பாட்டின் அடிப்படையில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு காணப்படவேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி சென்னையில் நடந்த சனிக்கிழமை செய்தியாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையில் இந்திய வெளியுறவு அமைச்சர் இந்தர்குமார் குஜ்ரால் மேற்சண்டவாறு தெரிவித்தார்.

திரு. குஜ்ரால் அச்சமயம் மேலும் சொன்னதாவது;

இலங்கையிலேயே அங்குள்ள தமிழ் அகதிகளுக்கு அகதி முகாம்களை அமைப்பது தொடர்பாக இந்தியா சர்வதேச அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு வருகிறது.

இலங்கை அரசும் போராளிக் குழுக்களும் இந்த முகாம்களை அமைக்க உதவும் என்று நான் நம்புகின்றேன். எனது கொழும்பு விஜயத்தின் போது இலங்கை-இந்திய உறவுகள் குறித்து சகல அம்சங்களும் விவாதிக்கப்படும்.

இப்பயணம் வர்த்தக உறவுகள் சம்பந்தமான பேச்சுக்களை நடத்தவே மேற்கொள்ளப்படுகிறது என்ற செய்தி உண்மைக்கு புறம்பானது ஆகும்.

அண்மையில் அவுஸ்ரேலியாவில் இலங்கை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவை நான் சந்தித்தேன். அப்போது சில காலமாக இயங்காது இருந்த இந்திய இலங்கை ஆணைக்குழுவை மீண்டும் செயற்படுத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டது. இப்பேச்சுக்களின் அடிப்படையில் எனது கொழும்பு விஜயத்துக்கான வழிமுறைகளை இரு நாடுகளின் அரசுகளும் வகுத்துள்ளன.

இப்படி திரு. குஜ்ரால் தெரிவித்தார். (இ-எ)

## மக்கள் வங்கி இடம் மாறும்

யாழ்ப்பாணம், செப். 24 மக்கள் வங்கியின் வட மாநிலக் காரியாலயமும், நகரக் கிளைகளும் யாழ்-பல்கலைக் கழக விஞ்ஞானபீடக் கட்டடத்துக்கு இடம் மாற்றப்பட இருக்கின்றன.

கன்னாதிட்டியில் இயங்கிய கிளையையும், ஸ்ரான்லி வீதியில் இயங்கிய கிளையையும் தலைமையகத்தையும் ஒரே கட்டடத்துக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ)


வலிகிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம் நீர்வேலி

## அனுதாபச் செய்தி

### திரு. மாரிமுத்து யோகநாதன்

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் எமது சங்கத்தினால் நடத்தப்படும் அரிசி ஆலையில் கடந்த ஆறுமாத காலமாக தன்னலம் கருதாது ஆலை முகாமையாளராக முழுமையான சேவையில் ஈடுபட்டு 21 - 9 - 90ல் அமரத்துவம் அடைந்த திரு. யோகநாதன் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கும் எமது சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

வலி.கிழக்கு தென் பகுதி ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி.

(சி/5213)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### திரு. சி. எஸ். சிவச்செல்வம்

தோற்றம்: 02 - 06 - 1928

மறைவு: 25 - 08 - 1990

அன்பான பப்பாவே!

தங்கள் நினைவுகள் என்றென்றும் எங்கள் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும் தங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி: சரஸ்வதி,
பிள்ளைகள்: சிவகுமாரன், செல்வகுமாரன் நந்தகுமாரன், சூரியகுமாரன், இந்துமதி,
உற்றார், உறவினர்.

வியாபாரி மூலை, பருத்தித்துறை

[சி-5211]

## மரண அறிவித்தல்

### திரு. மு. ஆறுமுகம்

மலேசியா தைப்பிங் வாசரும், சுழிபுரம் குருபூசை மடம் ஆ. முருகேசபிள்ளை தம்பதிகளின் புதல்வரும், மனோன்மணியம்மாவின் அன்புக் கணவரும், காலம் சென்றவர்களான கதிரவேற்பிள்ளை, சிவசிதம்பரம், பொன்னம்பலம், சிவப்பிரகாசம், சொர்ணம், மங்களம், மீனாட்சி மற்றும் சிற்றம்பலம் ஆகியோரின் சகோதரரும், சச்சிதானந்தன், மகாதேவியம்மா, விவேகானந்தன், பாலகிருஷ்ணன் ஆகியோரின் அருமைத் தந்தையுமாகிய மு. ஆறுமுகம் அவர்கள் மலேசியாவில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னாரின் உறவினர்களும், நண்பர்களும் இவ் அறிவித்தலை தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. ச. வரதராசன் [மருமகன்]
(வரதர், ஆனந்தா அச்சகம்)

'பிரகாஸ்பதி'
சுழிபுரம்.

[14309]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கிழக்குக் கொலைகள்

கிழக்கின் மூன்று மாவட்டங்களிலும் தமிழர் கொலைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் அதிக அளவில் நடத்தப்பட்ட கொலைகள் இப்போது மட்டக்களப்பிலும் பெருகி வருகின்றன. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் அங்கு நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கிழக்கில் நடக்கும் இக் கொலைகள் வெறும் இனப்படுகொலை மட்டுமன்றி அரசியல் உள்நோக்கமும் கொண்டவை.

வடக்கும்-கிழக்கும் தங்களது தாயகம் என்று தமிழர்கள் சொல்கிறார்கள் அதற்கு இடம் கொடுக்கக் கூடாது அதற்கு உரிய வழி கிழக்கிலிருந்து தமிழர்களை வெளியேற்றுவது தான்; அல்லாவிடில் அழித்தொழிக்க வேண்டும். இவ்வாறு திட்டமிட்டே கிழக்கில் தமிழர் கொலைகள் நடக்கின்றன என்று கருத வேண்டி உள்ளது.

இல்லையேல். அரசாங்க நிர்வாகத்தில் உள்ளதாகச் சொல்லப்படும் கிழக்கில் கொலைகள் நடப்பது எப்படி? அரசாங்கமும் உடந்தையாக இருந்தால் தானே அவை நடக்க முடியும்? அரசாங்க நிர்வாகத்தினால் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி அமைதியைப் பேண முடிந்தால், கொலைகள் நடக்க நியாயம் இல்லையே?

ஆகையால் கிழக்கில் நடக்கும் தமிழர் கொலைகள் அரசாங்க அனுசரணையுடன் தான் நடக்கின்றன என்று சொன்னால், கருதினால், அதில் தப்பு ஏது?

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை உடைப்பதானால். கிழக்கில் தமிழர்களைச் சிறுபான்மையினர் ஆக்க வேண்டும் என்ற எண்ணம் நீண்டகாலமாகவே சிங்களத் தலைவர்களிடம் இருந்து வருகிறது.

சிங்களக் குடியேற்றத்தினால் கிழக்கில் 75 சதவீதமாக இருந்த தமிழர் விகிதாசாரத்தை 40 ஆகக் குறைக்க முடிந்தது. அதனை மேலும் குறைத்து அவர்களைச் சிறுபான்மையினராக்குவதற்கு விரைவானதும், இலகுவானதுமான திட்டம் இனப்படுகொலை மூலம் தமிழர்களைக் கிழக்கிலிருந்துவெளியேற்றுவது தான் என்று அரசின் மூளைகள் திட்டம் வகுத்திருக்க வேண்டும்.

கிழக்கைத் தமிழர்களின் பாரம்பரிய தாயகம் என்று சொல்லமுடியாது அங்கு 40 வீதம் தமிழரும், 33 வீதம் முஸ்லிம்களும், 27 வீதம் சிங்களவரும் வாழ்வதால் அது மூன்று இனங்களினதும் தாயகம் — என்று அமைச்சர் அத்துலத் அண்மையில் அவிசாவளையில் கூறியிருப்பது மேற்சொன்ன திட்டத்தை ருசுப்படுத்துகிறது அல்லவா?

வடக்கு - கிழக்கை நிரந்தரமாக இணைக்க வேண்டும் என்று இம்மாத மத்தியில் நடந்த சர்வகட்சி மாநாட்டில் கொண்டுவரப்பட்ட ஆலோசனையை அரசாங்கக் கட்சியான ஐ.தே.க. ஆதரிக்காமல் இருந்ததன் அர்த்தமும் முன்சொன்ன திட்டத்தின் பிரதிபலிப்புத் தானே!

# போதிய மின்சாரம், தண்ணீர் வசதி இன்றி மன்னார் வைத்தியசாலை

## அத்தியாவசிய மருந்துவகைகள் பழுதடையும் அபாயம்

மன்னார், செப். 24

மன்னார் மாவட்ட அரசினர் வைத்தியசாலை பெரும் சிரமத்தின் மத்தியில் இயங்கி வருகிறது.

இங்கு நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதால் தண்ணீர்கஷ்டம் நிலவுகிறது. அவசர தேவைகளுக்குக் கூட தண்ணீர் எடுக்க அயல் புறங்களில் உள்ள கிணறுகளுக்கே வைத்தியர்களும், நோயாளிகளும் செல்கின்றனர்.

இதேவேளை -

இங்கு மின்சார விநியோகமும் போதியதாக இல்லை. ஆஸ்பத்திரிக்கு ஒரே ஒரு ஜெனரேட்டரே வழங்கப்பட்டுள்ளது. டீசல் கையிருப்பு போதியளவு இல்லாததால் தினமும் 2 மணி நேரமே மின்சாரம் வழங்கப்படுகிறது. இதனால் குறிப்பிட்ட சில மருந்துவகைகளைச் சேமிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மின்விநியோகம் சீரில்லாததால் ஆய்வு கூட வசதிகளும் தடைப்பட்டுள்ளன.

இதனால் இங்கு கடமையாற்றும் வைத்தியர்களும், ஊழியர்களும் அதிக கஷ்டத்தின் மத்தியில் சேவையாற்றி வருகின்றனர்.

இந்த வைத்தியசாலையில் 2 வைத்திய அதிகாரிகளும், கணிசமான அளவு ஊழியர்களுமே சேவையாற்றுகின்றனர். மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஜபாரின் சேவையை மக்கள் பாராட்டுகின்றனர்.

இதேசமயம் - மன்னார் ஆஸ்பத்திரியில் பிரெஞ்சுமருத்துவக் குழுவைச்சேர்ந்த வைத்தியர் ஒருவரும் கடமையாற்றி வருகிறார். ஒரே ஒரு அம்புலன்ஸே உள்ளது.

[இ - 6]

## மனநோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப். 24

தற்போதைய சூழ்நிலை காரணமாக மனநோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது அதேசமயம் அவர்களுக்கான மருந்து வகைகளும் இல்லை வைத்திய வட்டாரங்கள் மேற்கண்டவாறு கவலை வெளியிட்டுள்ளன.

மனநோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க தெல்லிப்பழை வைத்தியசாலையில் விசேஷ வார்ட் வசதிகள் செய்யப்பட்டு, வைத்திய வசதி அளிக்கப்பட்டு வந்தது.

ஆனால் தற்போதைய நிலையில் போதிய போக்குவரத்து வசதி, மருந்துவவசதிகள் இல்லாததால் மனநோயாளர்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது (இ 3)

## அலரி விதை உட்கொண்ட பெண்

பச்சிலைப்பள்ளி, செப் 24

கணவனைப் பிரிந்து சகோதரன் வீட்டில் தங்கியிருந்தவரைக் கணவனுடன் சென்று வாழுமாறு அறிவுரை கூறினாராம் சகோதரன்.

மனமுடைந்த சகோதரி அலரி விதைகளைச் சாப்பிட்டார்.

ஆபத்தான நிலையில் இவர் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அம்புலன்ஸ் மூலம் மந்திகை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இச் சம்பவம் பளை, வண்ணான் கேணிப் பகுதியில் இடம் பெற்றது.

[இ - 117]

## அகதிகள் பாதுகாப்பு மன்றம் அடையாள உண்ணாவிரதம்

கொழும்புத்துறை, செப். 24

தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றம் எதிர் வரும் 28 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை பருத்தித்துறை மந்திகை அரசினர் வைத்தியசாலை முன்பாக ஒரு நாள் அடையாள உண்ணவிரதம் இருக்க முடிவு செய்துள்ளது.

ஐக்கியநாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் ஜெனிவா அதிகாரிகளும் நேரில் வந்து ஸ்ரீலங்கா ராணுவத்தினரின் போர்க்கால நடவடிக்கைகளால் அகதிகளாக்கப்பட்ட தமிழ் மக்களை பார்ப்பதற்கு இலங்கை அரசு அனுமதி மறுத்துள்ளதைக் கண்டித்தே உண்ணாவிரதம் நடத்தப்படுகிறது. (இ-30)

## முல்லைத்தீவில் வருமானம் இழந்து தொழிலாளர் தவிப்பு

மாங்குளம், செப். 24

முல்லைத்தீவில் கடந்த சில மாதங்களாக ஏற்பட்டு வரும் இராணுவ நடவடிக்கையாலும் எரிபொருள். மின்சாரத் தடையாலும் தொழிலாளிகள் வருவாய் இழந்து தவிக்கின்றனர்.

ஓட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை. ஐஸ்தொழிற்சாலை, செங்கட்டித் தொழிற்சாலை, சுண்ணாம்புத் தொழிற்சாலை அரிசி ஆலைகள் ஆகியவற்றில் வேலை செய்த தொழிலாளர்களுக்கே இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மின்சாரத் தடையால் பால் சேகரிக்கும் நிலையம் இயங்காததால் பால் உற்பத்தியாளர்களும் வருமானம் இழந்துள்ளனர். (இ-94)

## இலங்கை இராணுவத்துக்கு இந்தியாவில் பயிற்சி

கொழும்பு, செப் 24

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த நூற்றிஐம்பது பேர் இந்தியாவில் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர் என்றும் -

இவர்களில் 50 பேர் அதிகாரிகள் தரத்தினர் ஆவர் என்றும் இராணுவத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க தெரிவித்தார் என சண்டே ஒப்சேவர் நேற்றுச் செய்தி வெளியிட்டது.

(இ-எ)

# தமிழகம் புறப்பட்ட ஈழ அகதிகள் திருமலை கடற்படை முகாமில்

யாழ்ப்பாணம், செப் 24

கடந்தவாரம் பருத்தித்துறையில் இருந்து இந்தியவுக்கு அகதிகளாகப் புறப்பட்டவர்கள் திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் பற்றிக்கூறப்படுவதாவது:-

இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்பவர்களை ஏற்றிக்கொண்டு 15 படகுகள் சமீபத்தில் பருத்தித்துறையில் இருந்து புறப்பட்டுச் சென்றன.

இந்த வள்ளங்கள் இந்தியக் கடல் எல்லைப் பகுதிக்கு அண்மையில் சென்று கொண்டிருந்த சமயம் இயந்திரப் படகு ஒன்று அவர்களை நோக்கி விரைந்து வந்தது.

அருகில் வந்ததும் தான் அது இலங்கைக் கடற்படையினரின் பீரங்கிப்படகு என்பது தெரியவந்தது. அப்படகிலிருந்தவர்கள் தாம் தமது உடைமைகளை இழந்து அகதிகளாக இந்தியா செல்வதாகக் கூறி, தம்மை பயணத்தைத்தொடர அனுமதிக்கும்படி கேட்டனர்.

அதற்கு மறுத்தகடற்படையினர் தம்முடன் பின் தொடர்ந்து வரும்படி படகோட்டிகளுக்கு உத்தரவிட்டனர்.

அந்த சமயம் பார்த்து 9 படகுகள் சமயோசிதமாக தப்பி இந்திய எல்லையினுள் பிரவேசித்து விட்டன. இதனால் ஆத்திரமுற்ற கடற்படையினர் ஏனைய படகுகளில் இருந்தவர்களைத் தாக்கி மீதி 6 படகுகளையும் தம் படகுடன் கட்டி இழுத்துச் சென்றனர்.

இவ்வாறு கொண்டு செல்லப்பட்டவர்கள் திருகோணமலை கடற்படைத்தள முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பின்னர் கடற்படையினர் படகுகளின் ஓட்டிகளான 6 பேரையும், படகில் பிரயாணம் செய்த திருமலை சல்லியைச் சேர்ந்த ஒருவர். சாம்பல் தீவைச் சேர்ந்த ஒருவர் திருகோணமலையைச் சேர்ந்த ஒருவர் பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவர் என 10 பேரையும் தடுத்து வைத்துக் கொண்டு ஏனையோரை, திருகோணமலை சீனக்குடாவில் உள்ள 'கிளப்பன் பேர்க்' அகதிகள் முகாமில் ஒப்படைத்தனர்.

இவர்கள் தற்போது இந்த அகதி முகாமிலேயே தங்கியுள்ளனர். பருத்தித்துறை, சல்லி, சாம்பல் தீவு, திருக்கடலூர் ஆகிய பகுதிகளை இவர்கள் சேர்ந்தவர்கள்.

இவர்களை திருகோணமலையில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்தினர் பார்வையிட்டு உதவிகள் வழங்கினர்.

(இ-6)

## அதிபர்களிடம் விவரம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், செப் 24

அண்மைக் கால அசம்பாவிதங்களால் சேதமடைந்த முறைசாராக் கல்வி தொழிற்திறன் பிரிவின் தொழிற்கூடங்கள், கருவி உபகரணங்கள் ஆகியவற்றின் விவரங்களை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்பாக யாழ் கல்வித் திணைக்கள முறைசாராக்கல்விப் பிரிவுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று முறைசாராக் கல்வி தொழில்நுட்ப அதிகாரி திரு ச. சுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

முறைசாராக் கல்விப்பணிப் பிரிவின் கொள்வனவுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின்செலவு விவரத்தையும் உடனடியாக அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். [இ-6]

## நிவாரணம்

வட்டுக்கோட்டை, செப் 24

சங்கானை ப.நோ.கூ. சங்கக் கிளைகள் மூலம் நிவாரணப்பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

(இ-161)

## திலீபன் நினைவாக...

அச்சுவேலி, செப், 24

தியாகி திலீபனின் நினைவாக ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் நாளை செவ்வாய்க்கிழமை புத்தூர் ஸ்ரீசோமாஸ் கந்தக்கல்லூரியில் நடைபெறும். கோப்பாய் பிரிவு வட்ட அவை உண்ணாவிரதத்துக்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

(இ 11)

★

நல்லூர், செப். 24

நல்லூர் தெற்கு சிற்றூரவையினரால் தியாகி திலீபனின் மூன்றாம் ஆண்டு நினைவு தின நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இன்று திங்கட்கிழமை மாலை 3. 00 மணி அளவில் தங்கரத பவனி நல்லூர் பகுதியில் இடம் பெறும். அதைத் தொடர்ந்து மாலை 4.00 மணி அளவில் நல்லூர் சாதனா பாடசாலையில் அஞ்சலிக் கூட்டம் இடம் பெறும் இதே சமயம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 30 மணிமுதல் மாலை4 30 மணி வரை நல்லூர் முத்திரைச் சந்தியில் உண்ண விரதம் நடைபெற உள்ளது.

(இ-6)

★

மாங்குளம், செப். 24

முல்லைத்தீவில் இராணுவ நடவடிக்கை குண்டுச்சத்தங்கள் மத்தியிலும் தியாகி திலீபனின் மூன்றாம் ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், மல்லாவி ஆகிய இடங்களிலும் அகதி முகாம்களிலும் வாழைகள் தோரணங்கள் கட்டப்பட்டு சோககீதம் இசைக்கப்படுகிறது, (இ-94)

★

கோண்டாவில், செப். 24

திலீபனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக கோண்டாவில் ரயில் நிலையத்தில் வெள்ளியன்று நூற்றுக்கணக்கான ஆண்களும், பெண்களுமாக ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தனர். [இ]

★

தாளையடி, செப் 24

தியாகதீபம் திலீபனின் மூன்றாவது ஆண்டு நினைவு தொடர்பாக பளை, வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் பந்தல்களும், வாழை, தோரணங்களும் கட்டப்பட்டுள்ளன.

சிற்றூரவைகள் திலீபனின் நினைவாக பல்வேறு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ளன. [இ-144]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரியில் திலீபன் நினைவாக தினசரி அஞ்சலி கூட்டங்கள்

பூநகரி, செப். 24

பூநகரியில் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் தினசரி அஞ்சலிக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

பூநகரிப்பகுதி மக்கள் வாடியடி மைதானத்தில் பந்தல் அமைத்து திலீபனின் உருவப் படம் வைத்து, மலர்மாலைகள் அணிவித்து சோடனை செய்துள்ளனர். அங்கேயே நாள்தோறும் அஞ்சலிக்கூட்டங்கள் நடந்துவருகின்றன.

இதேவேளைபூநகரி ப.நோ.கூ. சங்கத்தினரும் திலீபனின் உருவப்படம் வைத்து, தோரணங்கள்கட்டி அஞ்சலிசெய்து வருகின்றனர். (ஒ-ரி)

# சங்கானையில் நேற்று பலர் உண்ணாவிரதம்

சங்கானை, செப் 24

சங்கானை சந்தைக் கட்டடத்தில் நேற்று நூற்றுக்கும் அதிகமானோர் தியாகி திலீபன் நினைவாக உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

காலை 8 மணியளவில் சங்கானை சிற்றூரவைச் செயலாளர் திரு. எஸ் சீவரத்தினம் தலைமையில் உண்ணாவிரதம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வீர மரணமடைந்த போராளி இவானின் (மனோசரனின்) தாயார் உண்ணாவிரதத்தை நீராகாரம் வழங்கி முடித்துவைத்தார்.

திலீபனின் உண்ணாவிரத வீடியோ படமும் ஒளிபரப்பப்பட்டது.

இறுதியில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் யாழ்-மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் உட்பட பலர் உரை ஆற்றினர். (ஒ)

# விடுதலை புலிகளை---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

எதுவும் சாத்தியம் இல்லை. தமிழ் ஈழத்திற்கு மாற்றாக எதையும் பேச முடியாது'' என்றார்.

''இலங்கையில் போர் நிறுத்தம் தேவை'' என்று தமிழக முதலமைச்சர் கூறியுள்ளது பற்றிக் கேட்டதற்கு-

''முதலில் இலங்கைப் படை, விமானம்மூலம் குண்டு வீசுவதை நிறுத்த வேண்டும்'' என்று அவர் பதிலளித்தார்.

ராணுவ ரீதியாக விடுதலைப் புலிகளை ஒழிக்க இலங்கை அரசு முடிவு செய்துள்ள நிலையில், போர் நிறுத்தம் என்று கோருவது நடைமுறையில் சாத்தியம் அல்ல.

''இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்வதற்கு வழியில்லை தமிழர்கள் ராணுவ அதிகாரத்தைப் பெறுவது ஒன்றே பிரச்சினைக்குத் தீர்வாக இருக்கும்.''

இதற்கு இந்தியாவிடமிருந்து தார்மீக ஆதரவை எதிர்நோக்குகின்றோம்- என்றார்.

மற்றப் போராளிகள் குழுக்களுடன் கருத்து வேறுபாடுகளை மறந்து ஒன்றாக இணைந்து போராடுவதற்கான சாத்தியம் பற்றிக் கேட்டதற்கு-

மற்றப் போராளிக் குழுக்கள் இலங்கை அரசுடன் இணைந்து செயல்படுவதாக அவர் குற்றஞ்சாட்டினார்

''கிழக்கு மாகாணத்தில் அவர்கள் தமிழர்களைக் கொண்ட ஊர்காவல் படையை அமைத்துள்ளனர். அவர்கள்தான் முஸ்லிம்கள் கொல்லப்படுவதற்குக் காரணம். இரட்டை வேஷம் போடும் இலங்கை அரசு தமிழர்களைக் கொல்ல முஸ்லிம் ஊர்காவல் படையை அமைத்துள்ளது''- என்றார் அவர்.

விடுதலைப் புலிகள் இயக்கம் முஸ்லிம்கள், தமிழர்கள் என்றெல்லாம் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை-என்றும்கிட்டு கூறினார்.

## ஐ. நா. வில்

ஐ. நா. சபையின் மனித உரிமைகளுக்கான துணைக் குழுக் கூட்டம் ஜெனீவாவில் நடந்து வருகிறது. ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய போராட்டத்தை அங்கீகாரம் செய்யும்படி இக்குழுவை 18 சங்கங்கள் கேட்டு கோரிக்கை விடுத்துள்ளன

இலங்கை அரசுக்கு ராணுவத் தளபாடம் எதுவும் வழங்க வேண்டாம் என்று இங்கிலாந்து அரசை எங்கள் இயக்கம் கேட்டு இருக்கிறது.

தமிழர்கள் பாதுகாப்புடனும், அமைதியாகவும் வாழ வேண்டும் என்பதற்காகத் தான் நாங்கள் யுத்தம் நடத்தி வருகிறோம். தமிழர்களைப் பூண்டோடு அழித்து விடும் முயற்சி நீண்ட காலமாக நடந்து வருகிறது.

இதற்கு இந்தியா ஒரு நிரந்தரத் தீர்வு காண முயற்சி செய்ய வேண்டும்.

தமிழக முதல்வர் கலைஞர் எடுத்து வரும் முயற்சிகள் எமக்கு ஆறுதல் தருகின்றன. என்ன இருந்தாலும் நாங்கள் ஒரே ரத்தத்தைச் சேர்ந்தவர்கள் தானே. எங்களுக்கு இடையில் உள்ள பாசம் மங்கி விடாது.

## தேசிய முன்னணி அரசு

தேசிய முன்னணி அரசு எங்கள் பிரச்சினையில் உடனடி முடிவு எதுவும் எடுக்க முடியாத நிலையில் உள்ளது.

ஆனால் தமிழர்களின் நிலைப்பாட்டில் இருந்து இந்தியா பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்தியாவின் விருப்பங்களுக்கோ, நலன்களுக்கோ நாங்கள் எதிரானவர்கள் அல்லர் என்பதை பலமுறை கூறி இருக்கிறோம். இந்தியா அதைப் புரிந்து கொள்ள இன்னும் சிலகாலம் ஆகலாம்.

## அங்கிகரிக்க வேண்டும்

கொழும்பின் மீது இந்தியா தன் ராஜதந்திர முயற்சிகள் மூலம் வற்புறுத்தலாம். பாலஸ்தீன விடுதலை இயக்கம், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் போன்று எங்களுக்கும் அங்கிகாரம் வழங்க வேண்டும்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு வழங்கப்படும் மரியாதையை எங்களுக்கும் தர வேண்டும். அவர்கள் டெல்லியில் தூதரகம் வைத்து செயல்பட இந்தியா அனுமதி அளித்து உள்ளது. அதுபோல் எங்களுக்கும் அனுமதி தர வேண்டும்.

## அதிகாரபூர்வ அழைப்பு

இந்தியா எம்மை இனிமேல் பேச்சுக்கு அழைப்பதானால் அதிகாரபூர்வமான முறையில் தான் பேச அழைக்க வேண்டும் என்பதை நாங்கள் தெளிவுபடுத்தி விட்டோம். — என்றார் கிட்டு. (உ)

# கோட்டை சிப்பாய் பலி

கொழும்பு. செப். 24

யாழ்ப்பாணம் கோட்டை முகாம்மீது விடுதலைப் புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார். மூன்று சிப்பாய்கள் காயமடைந்தனர்.

இப்படிக் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

# பொம்மர் தாக்கி லொறி சேதம்

பூநகரி, செப். 24

பூநகரி. கண்ணாவிலில் பொருள்களுடன் சென்ற லொறி ஒன்றை நோக்கி பொம்மர் இரு குண்டுகளை வீசித் தாக்கியது.

கடந்த புதன்கிழமை நடந்த இந்தச் சம்பவத்தில் லொறியின்முன்பக்கம் பலத்த சேதமடைந்தது. அதில் சென்றவர்கள் தப்பிவிட்டனர். [ஒ]

# வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 24

கடந்த வெள்ளியன்று வயாவிளானில் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் காயமுற்ற விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிமொலாட் [ம.ஜெயகாந்தன் — புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு] நேற்று வீரமரணமடைந்தார். [உ]

# மண்கும்பான்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஹெலிகள் மூர்க்கத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டன. றொக்கட் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

ஹெலித் தாக்குதல்களின் காரணமாக, வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் அகதிகளுக்கு விநியோகிக்கவென வைக்கப்பட்டிருந்த மா சேதமடைந்தது. துறையூரில் ப. நோ. கூ. சங்க கிளைகளுக்கு பொருள்கள் கொண்டு சென்ற லொறி ஒன்றும் தாக்குதலுக்குள்ளானது.

இராணுவத்தினர் வருவதைக் கேள்வியுற்ற மக்கள் பாதுகாப்புத் தேடி ஏனைய இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர். (அ 3-9)

# சிங்கபுர---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

டாரங்கள் இத்தகவலை தெரிவித்தன.

இந்தத் தாக்குதலின்போது பின்வரும் ஆயுதங்கள் தங்களினால் மீட்கப்பட்டதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன!-

எல்.எம் ஜி-1, அதற்கான ரவைக் கூடுகள்-2. ரி 56 ரகத் துப்பாக்கி-3, ரி 81 ரகத் துப்பாக்கி-6, அவற்றுக்குரிய ரவைக் கூடுகள்-36, ரவைகள்-489, தொலைத் தொடர்புச் சாதனம்-1. (உ)

# தமிழர்---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

சபைக்கு தெரியப்படுத்தி உள்ளது

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட சேதங்கள், இழப்புக்கள்குறித்து அறிக்கை ஒன்றையும் தென் இந்திய திருச்சபை உலகத் திருச்சபை மன்றத்துக்கு அனுப்பியிருந்தது குறிப்பிடத்தக்கது. (அ-3 9)

# யாழ். நகரில்---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

நடத்திய தாக்குதலில் சிலவீடுகள் சேதமுற்றன.

ஓட்டுமடத்தில் விழுந்த குண்டினால் சந்தியில் இருந்த மூன்று கடைகள் முற்றாகச் சேதமடைந்தன.

பிரப்பங்குளம்வீதியில் நடத்தப்பட்ட மற்றொரு தாக்குதலில் வீடொன்று சேதமானது. [illegible] துக்கு அருகிலும் பொம்மர் தாக்குதல் இடம்பெற்றது. (ஒ-5)

யாழ். அத்தியாவசிய சேவை:

# கொழும்புக் கூட்டத்தில் செஞ்சிலுவை அதிகாரிகளும்

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கான அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக கொழும்பில் வாராந்தம் நடைபெறும் அரசாங்க அதிகாரிகள் கூட்டத்தில் செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு பிரதிநிதிகளும் பார்வையாளர்களாகக் கலந்து கொள்வர். அரசு அதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

உணவு விநியோகம் உட்பட முக்கிய விடயங்கள் குறித்து ஆராய அரசு வாராந்தம் கூட்டும் கூட்டத்தில் கொழும்பு அதிகாரிகள் மட்டுமே இப்போது பங்குபற்றுகிறார்கள்.

இனிமேல், யாழ். மாவட்டத்தில் உள்ள சகல திணைக்களத் தலைவர்களும் வாராந்தம் கூடி இங்குள்ள பிரச்சினைகள் தேவைகளை ஆராய்வர்.

அந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் கொழும்பில் நடைபெறும் அதிகாரிகள் கூட்டத்தில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளால் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. [அ-3 9]

# செஞ்சிலுவைச் சங்க---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

அல்லது தடுக்கின்றது.

குடாநாட்டுக்குப் பெருமளவு உணவுப் பொருள்கள் அனுப்பப்படுவதாக சிறீலங்கா கூறுகின்றது. ஆனால், இந்த 90 நாட்களிலும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஊடாக அனுப்பப்பட்ட அரிசி -1133 மெற்றிக் தொன்; மா - 804 மெற்றிக் தொன்; சீனி - 568 மெற்றிக் தொன்.

ஆனால், 90 நாட்களுக்கு யாழ். குடாநாட்டிற்குத் தேவையான அரிசி - 24 ஆயிரத்து 500 மெற்றிக் தொன்; மா - 12 ஆயிரத்து 250 மெற்றிக் தொன்; சீனி - 4 ஆயிரத்து 900 மெற்றிக் தொன்.

வந்த உணவு 7 நாட்களுக்குக் கூடப் போதாதவை. இவை அனுப்படும் போதும் பல தடவைகளில் இவைகள் விநியோகிக்க எரிபொருள் அனுப்பப்படுவதில்லை.

ஆகஸ்ட் 28 ஆம் திகதியன்று வந்த உணவுக்கப்பல் போர் நடவடிக்கை என்ற பெயரில் திருப்பி அனுப்பப்பட்டது

அதேபோல் காலவரையறை இன்றிப் போடப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் மூலம் உணவு விநியோகம் நடைபெறாமல் தடுக்கப்பட்டது; வைத்தியசாலைகள் இயங்க போதிய எரிபொருள் அனுப்பப்படுவதில்லை; அனுப்பப்படும் எரிபொருளில் அரைவாசிக்கு மேல் திரும்ப எடுத்துச் செல்லப்படும் நிலை தொடர்கின்றது

யாழ் குடாநாட்டிற்கு ஜூலை 16 ஆம் திகதி முதல் மின்சாரம் கிடையாது. மின்சாரம் வழங்கும் மின் கம்பிகளை கிளிநொச்சியில் செஞ்சிலுவைச்சங்க சர்வதேச குழுவின் உதவியுடன் திருத்த ஸ்ரீலங்கா அரசு அனுமதி வழங்கியது அதேவேளை சுன்னாகம் மின்சார நிலையத்தை நான்கு முறை குண்டு வீசி அழித்து, மின்சாரம் குடாநாட்டிற்கு வராமல் செய்தது.

யாழ் கோட்டையில் காயமுற்ற நிலையில் இருந்த நான்கு படை வீரர்களை சிகிச்சைக்காக கோட்டையில் இருந்து அகற்ற செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு நாடியபோது [ஜூலை 20 ஆம் திகதி] நாம் அதற்கு இணங்கினோம்.

யாழ் கோட்டையில் இருந்து படைவீரர்களை முழுமையாக அகற்ற விரும்பிய போது நாம் அதற்கு இணங்கினோம். ஆனால் காயமுற்ற படையினரை நாம் அகற்ற இணங்கவில்லை என ஸ்ரீலங்கா குற்றம் சுமத்தியது.

பலாலியில் உள்ள ஸ்ரீலங்கா படைமுகாமுக்கு கடந்த ஜூலை 4 ஆம் திகதி சென்ற செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதியின் வாகனத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது அவர் மயிரிழையில் உயிர் தப்பினார். அவரைக் காப்பாற்றும் முயற்சியில் எமது போராளிகள் மூவர் காயமுற்றனர்:

ஜூலை 17ஆம்திகதி ஆனையிறவுக்கு ஊடாக உணவு எடுக்கச் சென்ற செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் மீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

அவர்கள் உணவுப் பொருள்களுடன் திரும்பி வரும்போது அந்த வாகனத் தொடரை கேடயமாகப் பயன்படுத்திக் கொண்டு ஸ்ரீலங்காப் படை முன்னேற முயன்றது.

ஆகஸ்ட் 22ஆம் திகதி தீவுப் பகுதியில் ஸ்ரீலங்காப் படையின் தாக்குதல்களைத் தொடர்ந்து 400இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர்; நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

ஆகஸ்ட்22முதல் செப்டெம்பர் 10 வரை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் அங்கு செல்ல ஸ்ரீலங்கா அனுமதிக்கவில்லை.

செப்டெம்பர் 10ஆம் திகதி அனுமதி வழங்கப்பட்ட போதும் உணவு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

கிழக்கு மாகாணத்தில் 3ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள்; பல்லாயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்; 30இற்கு மேற்பட்ட குழந்தைகளும், நூற்றுக்கு மேற்பட்ட தமிழமக்களும் பட்டினியால் இறந்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பட்டாளிபுரம், இலக்கந்தை ஆகிய கிராமங்களைக் குறிப்பிடலாம். இப்படி பல கிராமங்கள்

இன்றுவரை இப்பகுதிகள் எங்காவது செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு உறுப்பினர்கள் சென்றது கிடையாது.

இவர்கள் முன்னிலையில் தமிழீழத்தில் ஜூலை 19 ஆம் திகதி முதல் ஸ்ரீலங்கா எரிகுண்டுகளை பொது மக்கள் வாழும் பகுதிகளில் வீசி வருகிறது; ஆஸ்பத்திரிகளை தாக்கி அழிக்கின்றது; ஆஸ்பத்திரி வாகனங்கள் மீதும் தாக்குகின்றது;

தமிழீழத்தில் இதுவரை போராட்டத்தால் காயமடைந்த மக்களுக்கும் ஸ்ரீலங்காவால் திட்டமிட்டு பட்டினி போடப்படும் மக்களுக்கும் செஞ்சிலுவை சங்க சர்வதேசக் குழுவினால் உதவ முடியவில்லை.

யாழ்- குடாநாட்டில் ஸ்ரீலங்காவின் இராணுவ கெடுபிடிகள் அற்ற பிரதேசத்தில் தான் அவர்களால் செயலாற்ற முடிகிறது. அதுவும் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு இல்லை என்பது தான் தமிழீழ மக்களின் கருத்து. செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு மீது தமிழீழ மக்கள் வைத்திருந்த மதிப்பு பெருமளவில் குறைந்துள்ளது.

தன்னையே பாதுகாக்க முடியாத ஓர் அமைப்பு கஷ்டப்பட்ட பகுதிகளுக்கு சென்று உதவும் என மக்கள் நம்ப ஆயத்தமாக இல்லை- என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 229/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24-09-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org